1975 அக்டோபர் 25]

THIRU D. SANTOSHAM : Mr. Deputy Chairman, Sir, these Model Shops, instead of being good models, sometimes also turn out to be bad models. May I know what are the steps taken by the Government to ensure that they are good examples and not bad models ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாம் முதலிடம் கூட்டுறவுக் கடைகளுக்குக் கொடுக்கிறோம். நம்முடைய சிவில் சப்ளேஸ் கார்ப்பரேஷன், மாதிரிக் கடைகள் என்ற முறையில் வைப்பதற்கு சில இடங்களில் நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். பெரும்பாலும் கூட்டுறவுக் கடைகளை ஊக்குவிப்பதுதான நல்லது. அது சரியான முறையில் நடைபெற வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது. இங்கே கூட்டுறவுக் கடைகள மீது புகார் செய்து, சிவில் சப்ளேஸ் கார்ப்பரேஷன் கடை வேண்டுமென்று கேட்கிறார்கள். இது ஆங்காங்கேயுள்ள நிர்வாகத்தைப் பொருத்திருக்கிறது.

Pilot Cement Plant at Muruvathur Village, Lalgudi Taluk

* 17. *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR) : Will the Hon. the Minister for Industries be pleased to state the present stage of the Pilot Cement Plant at Muruvathur Village, Lalgudi Taluk, Tiruchirappalli District.

லால்குடி தாலுக்கா, முருவத்தூர் கிராமத்தில் உள்ள முன் மாதிரியான சிமெண்ட் ஆலை (Pilot Cement Plant).

திரு. எல். பலராமன் (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி தாலுக்கா, முருவத்தூர் கிராமத்தில் உள்ள முன் மாதிரியான சிமெண்ட் ஆலை (Pilot Cement Plant) தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : முருவத்தூரிலுள்ள முன்னோடி சிமெண்ட் இயந்திரத் தொழிற்சாலையை தென் பகுதியில் ஒரு சிமெண்ட் ஆராய்ச்சி நிலையமாகச் செயல்படுத்துவதற்காக இந்திய சிமெண்ட் ஆராய்ச்சி நிலையத்திற்கு 6—6—74 அன்று நன்கொடையாக அளிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினா 18 ஒத்தி வைக்கப்படுகிறது.